என்று இப்படிப்பட்ட விதி முறைகள் வைத்து சட்டக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவேதான் இந்த ஊதிய விகிதம் தனியாகத் தரப்படுகிறது. இப்படிப்பட்ட விதிகள் கலைக் கல்லூரியில் நியமிக்கப்படுகிறவர்களுக்கு ஏற்படுத்தாததன் காரணமாக இந்த ஊதியத்தில் வேறுபாடு இருக்கிறது. ஆகவே இதிலே இரண்டாவது ஊதியக் குழு பார்த்து நிர்ணயித்திருப்பதன் காரணமாக மாற்றம் செய்யவேண்டிய அவசியமில்லை என்று இந்தத் துறை கருதுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தக் கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் பகுதி நேர விரிவுரையாளர்களாக இருப்பவர்கள் 'பிராக்டிசிங் லாயர்' ஆக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. அங்கு பணியாற்றும் விரிவுரையாளர்களின் சம்பளம் 'மீனியல்ஸ்' சம்பளத்தைவிட குறைவாக, 225 ரூபாய் என்று இருப்பதால் சிறந்த வழக்குரைஞர்கள் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்பதை மனதில் கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் வேண்டுமானல் தனியாக விண்ணப்பித்து, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கோரலாம். அவர்கள் தனியாக விண்ணப்பித்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுப்பதாக அரசு உத்தரவிட்டு, மீண்டும் அந்த உத்தரவை வாபஸ் பெற்று, குறைந்த சம்பளத்தைக் கொடுத்ததாகவும், அவர்கள் அதிகமாக வாங்கிய சம்பளத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததும் எப்படி நிகழ்ந்ததென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரக் குறிப்புகள் தரப்படும். அதில் என்ன நிலை ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியும்.

Remuneration to Teachers

* 327 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the remuneration of the teachers appointed in various coaching centres to prepare students of Scheduled Castes and Scheduled Tribes for the Tamil Nadu Public Service Commission Examination for Group IV Service examination has not been paid so far; and